கூட்டம் 1,000 பேர் கொண்டதாக அதிகப்பட்டது. அவர்கள் மின் இணைப்பை மீண்டும் கொடுக்கும்படிக் கோரிக்கொண்டேயிருந்தனர். சூழ்நிலை மிகவும் மோசமடைந்ததால், வேண்டத்தகாத நிகழ்வுகள் நடப்பதைத் தவிர்ப்பதற்காக கோட்டப் பொறியாளர் மின் இணைப்பை மீண்டும் கொடுப்பதற்கு ஆணையிட வேண்டியதாயிற்று. மின் இணைப்பு கொடுப்பதற்காக வாரியப் பணியாளர்கள் அனுப்பப்பட்ட பின், கூட்டம் கலைந்து சென்றது.

4. பெருமாநல்லூர்.

பெருமாநல்லூர் பிரிவில் மேற்பார்வையாளர் அலுவலகத்திற்கு முன்பு சுமார் 150 பேர் கூடி மின் இணைப்பைத் துண்டிக்க நடவடிக்கைகள் எடுக்கக்கூடாதென வற்புறுத்தினர். இதற்கிடையில், மின் இணைப்பைத் துண்டிக்கச் சென்ற பணியாளர், பகிர்ந்தளிப்பு அலுவலகத்திற்குத் திரும்பி வந்து, மின்சாரம் பயன்படுத்துவோர் எதிர்ப்பு தெரிவித்ததால் தாங்கள் எந்த மின் இணைப்பையும் துண்டிக்கவில்லை யென்று பிரிவு அதிகாரியிடம் கூறினர். இதைக் கேட்டவுடன் கூட்டம் கலைந்து சென்றது.

In Pursuance of the instructions issued by the Chief Engineer (Electricity) on 10th May 1970 to disconnect such of those agricultural services of the consumers who had not paid the current consumption charges at enhanced rates, the Electricity Board officials commenced disconnection of services of the defaulting consumers from 11th May 1970, seeking Police Proetction in case there was any physical obstruction from the consumers. However, certain officials of the Electricity Board in Tudialur, Mettupalayam, Annur and Perumanallur areas in Coimbatore district were gheroed by the Agricuturists when the officials disconnected the services of the defaulting consumers for non-payment of the current consumption charges.

The details of the incidents that happened in the four places mentioned above are given below—

1. *Tudialur Area.*—Four services were disconnected on the morning of 11th May 1970. The Line Inspector, after disconnection, returned to the Supervisor's office, where he found a crowd gathered in front of Supervisor's office, demanding reconnection of the disconnected services. From there, they went, along wth the Supervisor and the Line Inspector, to the Assistant Engineer's house within the sub-station. The crowd demanded the Assistant Engineer to order for the reconnection of these services. The Assistant Engineer initially said that he had no powers to order for reconnection, but the crowd threatended him and wanted him to order reconnection. Apprehending violence at any time before any police could come, the Assistant Engineer was forced to issue orders of reconnection of the four diconnected services. Then the crowd dispersed.

2. *Mettupalayam Area.*—About 15 services were disconnected on the morning of 11th May 1970 in Mettupalayam town section, as the staff did not experience any objection from these consumers and the staff return to the headquarters. In the afternoon a crowd of over 200 to 300 people gathered in front of the Mettupalayam sub-station and demanded the Assistant Engineer reconnection of the disconnected services. The Assistant Engineer told the crowd that he has no powers to order reconnection and he had to obtain orders of higher authorities for same. Meanwhile, he phoned up to the local police and few constables and the Sub-Inspector of police came to the sub-station. The crowd was waiting outside the sub-station the whole night and early next morning (12th May 1970) some more crowd collected and the crowd later sewelled up to about 1,000 persons and they entered the sub-station and again started demanding the Assistant Engineer for reconnection. The Assistant Engineer persuaded the crowd not to press him for reconnection, as he had no powers. But they insisted on him to issue reconnection orders to the staff and forced him to go with them to the place of services that were disconnected. As the Assistant Engineer apprehended trouble, he went with the crowd and ordered reconnection. Thereafter the crowd dispersed and the Assistant Engineer returned to his work.

3. *Annur Area.*—Five services in the Annur area were disconnected on the morning of 11th May 1970. At about 2-45 p.m. when the Divisional Engneer (Distribution), Coimbatore, and the Assistant Engineer, Annur were coming towards Koilpalayam in the departmental jeep, a crowd of about 100 persons who were coming towards Annur on the same road, saw the jeep and spread themselves all over the road and obstructed the jeep. and stopped it. They demanded that the services disconnected should be reconnected immediately. The Divisional Engineer said to them that he had no powers to order reconnection of the services. Inspite of that, they shouted and did not allow the Divisional Engineer to proceed further and forced him to go to Annur Office. The crowd had swelled to 1,000 by then and they went on demanding for the reconnection of the services. As the situation was very tense, with a view to avoid any untoward happenings, the Divisional Engineer had to order the reconnection of the services. After the staff were sent for reconnection, the crowd dispersed.

4. *Perumanallur.*—In front of the Supervisor's office at perumanallur Section, a crowd of about 150 got collected and insisted on steps not being taken for disconnection. Meanwhile the staff, who went for disconnection, returned to the distribution office and informed the Section Officer that they did not disconnect any service, as the consumers objected. On hearing these, the crowd dispersed.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1971 அக்டோபர் 22.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் **பேரவை** மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. **மதியழகன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்--விடைகள்.

வெள்ளிக்குறிப்பிட்ட வினாக்கள்.

வகுப்பில் பின்தங்கிய அரசு உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்குத் தனிப் பயிற்சி

*17. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வகுப்பில் பின்தங்கியிருக்கும் அரசினர் உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு அப் பள்ளியின் ஆசிரியர்களைக் கொண்டே மாலை நேரங்களில் பிரத்தியேக வகுப்புகள் நடத்தும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை

ஆடு வளர்ப்புப் பண்ணைகள்

*18. வினா—திரு. ரா. ரா முனுசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தற்போது ஆடு வளர்ப்புப பணணை எந்தெந்த மாவட்டங்களில் உள்ளது?

(இ) அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) தற்போது தென்னாற்காடு மாவட்டத்துள்ள சின்னசேலத்திலும், செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள காட்டுப்பாக்கத்திலும், இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள சாத்தூரிலும் ஆட்டுப் பண்ணைகள் உள்ளன. உதகையில் ஆடு வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம் ஒன்றும் உள்ளது. இவை தவிர ஓசூர், புதுக்கோட்டை, அபிஷேகப்பட்டி, செட்டிநாடு ஆகிய ஊர்களிலுள்ள மாவட்ட கால்நடைப் பண்ணைகளில் ஆடுகள் வளர்ச்சிக்கான பிரிவுகள் இருக்கின்றன.

(இ) இது பற்றி விவர அறிக்கை * ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

(* 191-194-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.)